**திருக்கோவிலூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை**

**பிறப்பிப்பவர் செல்வி.பா.திவ்யா,B.Sc(Agri)**

**ந.கஎண்.1408/2025/எப்1** **நாள்.09.02.2026**

பொருள்: திருக்கோவிலூர் நகராட்சிப் பகுதி – சர்வே எண். 767/2B1B,768/2A–ல் 2.45 ஏக்கர் (அ) 9920 ச.மீ பரப்புள்ள இடத்தினை – குடியிருப்பு மனைகளாக செய்து – இறுதி ஒப்புதல் அளித்து – உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை: 1.கள்ளக்குறிச்சி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி ந.க.எண். LP / SWP / DTCP / Kallakurichi / APPROVALNo 154/2025, AQNJXR6C/54450/2025/TCP ,நாள். 25.10.2025.

2. திரு.G.அருண் மற்றும் A.கோமல் நெ.24/25ஹண்டர்ஸ் ரோடு, புரசைவாக்கம், வேப்பேரி சோலை சென்னை – 600012

3.மனைப்பிரிவு உரிமையாளர் திரு.G.அருண் மற்றும் A.கோமல் அவர்கள் நகராட்சி ஆணையருக்கு சமர்ப்பித்துள்ள தான ஆவணம் எண்.6879/ 2025 நாள்.22.10.2025

4.இவ்வலுவலக நகரமைப்பு ஆய்வாளரின் தள ஆய்வு குறிப்பு கோப்பு நாள்.29.10.2025

5.திருக்கோவிலூர் நகராட்சி பொறியாளரின் தள ஆய்வு குறிப்பு நாள். 04.12.2025

6.திருக்கோவிலூர் நகராட்சி பொறியாளரின் குறிப்பு நாள். 22.01.2026

7.மனைப்பிரிவு உரிமையாளர் நகராட்சிக்கு செலுத்திய கட்டணங்களின் ரசீது எண். எண்.177/TK1/1/25–26/0011197. மற்றும் 177/TK1/1/25–26/0011198. நாள்.23.01.2026

8.திருக்கோவிலூர் நகரமன்ற தீர்மானம் எண்.824 நாள்.28.01.2026

9.மனைப்பிரிவு உரிமையாளர் Land Conversion Cost அரசுக்கு செலுத்திய ரசீது எண். 20251202057527 Challan Date.02.12.2025

********

திருக்கோவிலூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட சர்வே எண். 767/2B1B,768/2A–ல் 2.45 ஏக்கர் (அ) 9920 ச.மீ பரப்புள்ள இடத்தினை குடியிருப்பு மனைகளாக அபிவிருத்தி செய்து விற்பனை செய்யும் நோக்கில் உரிய வரைபடங்களையும், ஆவணங்களையும் பார்வை 1ல் காணும் கள்ளக்குறிச்சி நகர்ஊரமைப்பு உதவி இயக்குநர் தொழில்நுட்ப அனுமதி ந.க.எண் LP / SWP / DTCP / Kallakurichi / APPROVALNo 154/2025 AQNJXR6C/54450/2025/TCP , நாள். 25.10.2025 அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து, பார்வை 2ல் காணும் திரு.G.அருண் மற்றும் A.கோமல் நெ.24/25ஹண்டர்ஸ் ரோடு, புரசைவாக்கம், வேப்பேரி சோலை சென்னை – 600012 மனைப்பிரிவு உரிமையாளர் இந்நகராட்சியின் இறுதி ஒப்புதல் வேண்டி 27.10.2025–ல் விண்ணப்பம் செய்துள்ளார்.

பார்வை 3ல் காணும் இந்நகராட்சிக்கு தான ஆவணம் அளிக்க வேண்டிய சாலைகள் மூலை முடக்குகளுடன் 3059.71 ச.மீ, பூங்காவிற்கு 698.67 ச.மீ மற்றும் பொது உபயோக இடம் 128.14 ச.மீ காலியிட பங்களை தான ஆவணம் எண்.6879/2025 தேதிய தானபத்திரம் மூலமாக நகராட்சி ஆணையரின் பெயருக்கு 22.10.2025-ல் பதியப்பட்டு அசல் பத்திரம் சமர்பித்துள்ளார்.

அதனை தொடர்ந்து பார்வை 4-ல் காணும் இவ்வலுவலக நகரமைப்பு ஆய்வாளரின் நேரடி தள ஆய்வு அறிக்கையின் இந்நகராட்சி பொறியாளரின் அறிக்கை பெற தெரிவிக்கப்பட்டதற்கிணங்க பார்வை 5 ல் காணும் இவ்வலுவலக நகராட்சி பொறியாளர் அவர்கள் மேற்படி மனைப்பிரிவில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து பார்வை 6-ல் கண்டுள்ளவாறு மேற்படி மனைப்பிரிவில் நகராட்சி பொறியாளர் தெரிவிக்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளர் கோப்பு குறிப்பில் 22.01.2026-ன் மூலம் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

பார்வை 7-ன் படி மனைப்பிரிவுக்காக நகராட்சிக்கு கட்டணமாக தனியார் நிலத்தை மனைகளாகவும், தெருக்களாகவும் பிரிக்க நகராட்சி கருவூலகத்தில் ரசீது எண். 177/TK1/1/25-26/0011197. ன் மூலம் கட்டணமாக ரூ.10,000/- மற்றும் கொடி நாள். கட்டணம் ரூ.5000/- ம் ரசீது எண். 177/TK1/1/25-26/0011198-ல் கூராய்வு கட்டணமாக ரூ.52000/- உட்பிரிவு அபிவிருத்தி கட்டணம் ரூ.26000/-, நாள். 23.01.2026-ல் ஆக மொத்தம் ரூ.93000/- ஆகிய தொகைகளை செலுத்தியுள்ளார். பார்வை 8-ல் காணும் மேற்படி மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க நகர மன்றம் தீர்மான எண்.824, நாள்.28.01.2026 அனுமதியளிக்கப்பட்டதை தொடர்ந்து பார்வை 9-ல் காணும் விபரப்படி மேற்படி மனைப்பிரிவுக்காக Land Conversion Cost மனைப்பிரிவு பரப்பின் சந்தை மதிப்பில் 3% தொகைக்கான ரூ.68520/-ஐ இ-சலான் எண். 20251202057527 நாள்.02.12.2025ன் மூலமாக மனைப்பிரிவு உரிமையாளர் அரசுக்கு செலுத்தியுள்ளார்.

ஆகவே திருக்கோவிலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண். 767/2B1B,768/2A-ல் 2.45 ஏக்கர் (அ) 9920 ச.மீ பரப்புள்ள அமையப்பெற்றுள்ள 1 முதல் 52 வரையிலான 52 குடியிருப்பு மனைகளை கள்ளக்குறிச்சி நகர்ஊரமைப்பு உதவி இயக்குநரின் தொழில்நுட்ப அனுமதிஎண். LP / SWP / DTCP / Kallakurichi / APPROVALNo 154/2025 AQNJXR6C/54450/2025/TCP நாள். 25.10.2025 -ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு குடியிருப்பு மனைகளாக அங்கீகாரம் வழங்க நகர மன்ற தீர்மான எண்.824, நாள்.28.01.2026 -ன் படி அனுமதி

அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து சர்வே எண். 767/2B1B,768/2A-ல் 2.45 பரப்புள்ள அமையப்பெற்றுள்ள 1 முதல் 52 வரையிலான 52 குடியிருப்பு மனைகளுக்கு இறுதி ஒப்புதல் அளித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

ஆணையாளர்
திருக்கோவிலூர் நகராட்சி

பெறுதல்

திரு.G.அருண் மற்றும் A.கோமல்
நெ.24/25ஹண்டர்ஸ் ரோடு,
புரசைவாக்கம், வேப்பேரி
சோலை சென்னை – 600012

நகல் :– கள்ளக்குறிச்சி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் தகவலுக்காக அனுப்படுகிறது.
நகல் :– சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருக்கோவிலூர்